# முதலாவது ஹதீஸ் மனனப் போட்டி

# ஹிஜ்ரி 1433ம் ஆண்டு

## தேர்ந்தெடுக்கப்பட்ட 50 நபிமொழிகள்

- ❖ அறிவிப்பாளர் பற்றி சிறுகுறிப்பு
- ❖ சிறு விளக்கங்களுடன்

مسابقة السنة النبوية الأولى للجاليات

لعام 1433هـ

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் திருப்பெயரால் ஆரம்பிக்கின்றேன்

அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். பயபக்தியுள்ளவர்களுக்கே நல்ல முடிவு இருக்கின்றது. சாந்தியும் சமாதானமும் நபிமார்கள் ரஸூல்மார்கள் அனைவருக்கும் தலைவரான முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் கிளையார் தோழர்கள், இறுதிநாள் வரை அவர்களைப் பின்பற்றும் அனைவர் மீதும் உண்டாவதாக.

அல்குர்ஆனுக்கடுத்ததாக இஸ்லாத்தின் இரண்டாவது மூலாதாரம் நபிகளாரின் வழிமுறை எனப்படும் சுன்னாவாகும். இதனால் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட அனைத்து வழிமுறைகளிலும் இந்த சுன்னாவின்பால் அக்கறை செலுத்துவது முஸ்லிம்கள் மீது கடமையாகும்.

இந்த சுன்னாவை மனனமிடுவதிலும், அதன் சட்டங்களை அறிவதிலும், நாளாந்த வாழ்கையில் அதனைக் கடைபிடிப்பதிலும் போட்டிகள் வைப்பதன் மூலம் மக்களிடையே (சுன்னாவைப்) பரவச்செய்வது அதன்பால் அக்கறை கொள்வதற்கான ஓர் எடுத்துக்காட்டகும். ஏனெனில் (இது போன்ற) அறிவியல் போட்டிகளின் மூலம் பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையில் அழைப்புப்பணி மேற்கொள்ளும் போது பெரிய சாதகமான தாக்கங்கள் ஏற்படுகின்றன. மேலும் இது போன்ற போட்டிகள் நடத்தப்படுவதனால், -அல்லாஹ்வினுடைய உத்தரவால்- பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையே சுன்னாவினுடனான ஆழமான தொடர்பினை உருவாக்க முடிகின்றது.

எனவே (ரப்வா த∴வா நிலையத்தின்) மேம்பாட்டுப் பிரிவு, மக்களுடைய மகிழ்ச்சிகரமான இஸ்லாமிய வாழ்கையை (இந்த) சுன்னாவின் ஒளியில்

நடாத்திச்செல்ல, அடிப்படைக் கொள்கை, சட்டதிட்டங்கள், நற்குணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய, தெரிவு செய்யப்பட்ட சில நபிமொழிகளை மனனமிட வைக்கவும், அதன் தேற்றத்திற்கேற்ப பின்பற்றி நடக்கவும், இந்தப் போட்டிகளை நடாத்த மிகவும் ஆர்வமாகவுள்ளது.

இதனால் (ரப்வா த∴வா நிலையத்தின்) இப்பகுதி அனைத்து சமூகங்களுக்கும் - அல்லாஹ்விடம் கூலியை எதிர்பார்த்தவர்களாக, அவனுடைய உத்தரவின் பிரகாரம் - இப்போட்டியில் உள்ளார்வமிக்க பங்குபற்றலை வரவேற்கின்றது.

(ரப்வா த∴வா நிலையத்தின்)சமூக மேம்பாட்டுப் பிரிவு ஹதீஸ் மனனப் போட்டிக்காக இப்பாடதிட்டத்திணை உங்கள் முன் வைக்கின்றது. இதனை மென்லேும் முன்னேற்ற உங்களிடமிருந்து நல்ல பல கருத்துக்களை வரவேற்கின்றது. இப்போட்டி

பற்றி மேலதிகத் தகவல் பெற விரும்புவோர் (எமது நிலையத்திலுள்ள) அதற்கான பிரிவுடன் தொடர்பு கொள்ளவும். – அல்லாஹ்வின் உதவியினால்- அவர் ஆலோசனைக்கு முழுமையான வரவேற்பளிக்கப்படும்.

எங்கள் இறைத்தூதரும் அன்புக்குரியவருமான முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் கிளையார் தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் அல்லாஹ் சாந்தியும் சமாதனமும் அருள்வானாக.

அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

அழைப்பு மற்றும் சமூக மேம்பாட்டுப் பிரிவு

அழைப்பு மற்றும் சமூக மேம்பாட்டுப்
பணியகம் - ரப்வா, ரியாத்

(١) عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ وَإِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ وَالْحَجِّ وَصَوْمِ رَمَضَانَ" (صحيح البخاري : ٨)

(1) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் அவர்கள் இறைத்தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலை நிறுத்துதல், ஸகாத்து வழங்குதல், ஹஜ் செய்தல், ரமாலானில் நோன்பு நோற்றல், ஆகிய ஐந்து காரியங்களின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது”

அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி).

ஆதாரம் : புஹாரி 8.

## 🖊 ஹதீஸ் அறிவிப்பாளர்:

அப்துல்லாஹ் பின் உமர் பின் கத்தாப் (ரலி) இவர் தன் தந்தையுடனே இஸ்லாத்தை ஏற்று மதீனாவிற்கு ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டவர். கந்தக் யுத்தத்தைத் தொடர்ந்து நடைபெற்ற அனைத்து யுத்தங்களிலும் கலந்து கொண்டார். சுன்னாவைப் பற்றிப்பிடிப்பதில் முன்னுதாரணம் கூறப்பட்டவர், நபிகளாரைத் தொட்டும் 2630 ஹதீஸ்களை அறிவித்திருக்கின்றார். தனது 86ம் வயதில் ஹிஜ்ரி 73ம் ஆண்டு மரணமடைந்தார்.

## ☞ ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

1- இரு ஷஹாதாக் கலிமாக்களையும் மொழிந்து அதனை ஏற்றால் தொழுகையை நிலை நிறுத்துதல், ஸகாத்து வழங்குதல், ஹஜ் செய்தல், ரமழானில் நோன்பு நோற்றல், ஆகிய காரியங்களையும் ஏற்று நடத்தல் வேண்டும்.

2- இஸ்லாத்தின் போதனைகளை நடைமுறைப்படுத்த முன் இரு ஷஹாதாக் கலிமாக்களையும் ஏற்க வேண்டும்.

3- இரு ஷஹாதாக் கலிமாக்களையும் ஏற்றல் என்பது ஈமானின் ஆறு அம்சங்களையும் உள்ளடக்கும்.

4- இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்கள் மற்றும் அதன் போதனைகளில் பாரபட்சமின்றி அவற்றை முழுமையாக ஏற்று நடத்தல் வேண்டும்.

(٢) عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّه عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "الْأَعْمَالُ بِالنِّيَّةِ وَلِكُلِّ امْرِئٍ مَا نَوَى فَمَنْ كَانَتْ هِجْرَتُهُ إِلَى اللَّهِ وَرَسُولِهِ فَهِجْرَتُهُ إِلَى اللَّهِ وَرَسُولِهِ وَمَنْ كَانَتْ هِجْرَتُهُ لِدُنْيَا يُصِيبُهَا أَوْ امْرَأَةٍ يَتَزَوَّجُهَا فَهِجْرَتُهُ إِلَى مَا هَاجَرَ إِلَيْهِ" (صحيح البخاري ٥٤)

(2) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொரு மனிதருக்கும் அவர் எண்ணியதுதான் கிடைக்கிறது. எனவே எவருடைய ஹிஜ்ரத் அல்லாஹ்வுடையவும் அவனுடைய தூதருடையவும் கட்டளைக்கேற்ப அமையுமோ அவரின் ஹிஜ்ரத்தை அவ்வாறே அல்லாஹ் கருதுவான். மேலும் எவருடைய ஹிஜ்ரத் உலகத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் அல்லது ஒரு பெண்ணைத் திருமணம் செய்யும் நோக்கமாக இருந்தால் அவருடைய ஹிஜ்ரத் எதை நோக்கமாகக் கொண்டுள்ளதோ அதுவாகவே அமைந்து விடுகிறது”

அறிவிப்பவர் : உமர் (ரலி).

ஆதாரம் : புஹாரி 54.

🖊 **ஹதீஸ் அறிவிப்பாளர்:**

உமர் பின் கத்தாப் (ரலி) இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இரண்டாம் கலீபா, நுபுவ்வத்தின் பின் 6ம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றார், அவரின் வருகை இஸ்லாத்திற்கே வெற்றியாக அமைந்தது. அல்குர்ஆன் அவரின் அபிப்பிராயத்திற்கு ஒத்ததாத பல சந்தர்ப்பங்களில் இறங்கியது. நபிகளாருடன் அனைத்து யுத்தங்களிலும் கலந்து கொண்டார். ஹஜ்ரி 13ம் ஆண்டு அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது மரணத் தருவாயில் இஸ்லாமிய உம்மத்தின் அடுத்த கலீபாவாக அவரை நியமித்தார். ஹிஜ்ரி 23ம் ஆண்டு பஜ்ருத் தொழுகையில் வைத்து அபூலுஃலுஆ என்ற நெருப்பு வணங்கியினால் கொலை செய்யப்பட்டு அன்னை ஆயிஷாவின் அறையில் நபி (ஸல்) மற்றும் அபூபக்ர் (ரலி)அவர்களுடன் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1 நல்லறங்களுக்கு கூலி வழங்கப்பட வேண்டுமென்றால் நிய்யத் எனும் எண்ணம் அவசியமாகும்.

2- நிய்யத்தின் இடம் உள்ளமாகும், அதனை மொழிவது மார்க்கமயமாக்கப்படமாட்டாது.

3- இக்லாஸ் எனும் உளத்தூய்மை அனைத்து நல்லறங்களும் ஏற்கப்படுவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாகும். உளத்தூய்மையுடனும் நபிகளாரின் வழிமுறைக்கேற்பவும் மேற்கொள்ளப்படும் நல்லறங்களையே இறைவன் ஏற்கின்றான்.

4- முகஸ்துதியிலிருந்து தவிர்ந்து நடப்பது அவசியமாகும்.

(٣) عَنْ عَبْدِ اللَّهِ بْنِ مَسْعُوْدٍ قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ :
"سِبَابُ الْمُسْلِمِ فُسُوقٌ وَقِتَالُهُ كُفْرٌ" (صحيح مسلم ١١٦)

(3) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : **“**ஒரு முஸ்லிமை ஏசுவது பாவமாகும். அவனுடன் போரிடுவது (அல்லது கொலை செய்வது), இறைமறுப்பு (போன்ற பாவச் செயல்) ஆகும்**”**

அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 116.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) நபித்தோழர்களில் மிகத் திறமையாக அல்குர்ஆனை பாராயணம் செய்யக் கூடியவர். கலீபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்தில் கூபாவிற்கு மார்க்கத்தை கற்றுக்கொடுக்க அனுப்பப்பட்டார். பின்னர் உஸ்மான் (ரலி) அவர்களின் ஆட்சியில் கூபாவிற்கு கவர்னராக நியமிக்கப்பட்டார். ஹிஜ்ரி 32 ம் ஆண்டு மதீனாவில் மரணித்து பகீஉல் கர்கதில் அடக்கம் செய்யப்பட்டார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- இந்த நபி மொழி ஒரு முஸ்லிமை நிந்திப்பதை கடுமையாக எச்சரிக்கை செய்கின்றது. அவனை குறை கூறும் விதத்தில் அவனிடம் இருப்பவை, இல்லாதவைகளைக் கூறுவது இதில் உள்ளடங்கும்.

2- மேலும் ஒரு முஸ்லிமை கொலை செய்வதையும் கடுமையாக எச்சரிக்கை செய்கின்றது. கொலையை விட நிந்திப்பதனை முற்படுத்தப்பட்டதற்கான காரணம் ஏனெனில் கொலைக்கு முன்னரே ஏசுவதும் நிந்திப்பதும் நடைபெறுகின்றன.

3- ஒரு முஸ்லிம் நல்ல ஒழுக்க விழுமியங்களை தன்னகத்தே கொண்டவனாகவும் அதனை மாசுபடுத்தும் குணங்களிலிருந்து தூரமானவனாகவும் இருக்க வேண்டும் என்று இந்த நபிமொழி வலியுறுத்துகின்றது.

(٤) عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ الله عَنْهُمَا : أَنَّ النبيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ نَهَى أَنْ يُتَنَفَّسَ فِي الإناءِ أَوْ يُنْفَخَ فِيهِ (جامع الترمذي ١٨٨٨) قال الترمذي : هذا حديث حسن صحيح.

**(4) நபி (ஸல்) அவர்கள் பாத்திரங்களில் (ஒருவர் ஏதேனும் பருகும் போது) மூச்சு விடவோ அல்லது அதில் ஊதவோ வேண்டாமெனத் தடைவிதித்தார்கள்.**

அறிவிப்பவர் **:** இப்னு அப்பாஸ் (ரலி)**.**

ஆதாரம் **:** திர்மிதி 1888**.** (இமாம் திர்மிதி இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்)**.**

✍ **ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) இந்த உம்மத்தின் அறிவுக்கடல் என்றும் அல்குர்ஆனிற்கு சிறந்த விரிவுரையாளர் என்றும் போற்றப்பட்டவர். நபிகளாரின் பெரிய தந்தையின் மகனுமாவார். நபிகளாரைத் தொட்டும் 1660 ஹதீஸ்களை அறிவித்திருக்கின்றார். தனது 70ம் வயதில் ஹஜ்ரி 68ம் ஆண்டு மரணமடைந்தார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- உண்ணுதல், பருகுதல் என்பவற்றில் நல்லாரோக்கியமான வழிமுறைகளை இந்த நபிமொழி வலியுருத்துகின்றது.

2- உணவு, பானங்களில் மூச்சுவிடுவதனையும் அவற்றில் ஊதுவதனையும் இந்த நபிமொழி தடைசெய்கின்றது. உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதையயும் வலியுருத்துகின்றது.

3- உண்ணும் போதும் பருகும் போதும் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து நடக்க வேண்டும். அவர்கள் அருவருக்கும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது.

(٥) عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ مَسْعُوْدٍ رَضِيَ اللّٰه عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : إِنَّ لِلّٰهِ مَلَائِكَةً سَيَّاحِيْنَ فِيْ الْأَرْضِ يُبَلِّغُوْنِيْ مِنْ أُمَّتِيْ السَّلَامَ. (سنن النسائي ١٢٨٢) هذا حديث صحيح.

(5) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “என்னுடைய சமூகத்தினர் (எனக்கு) சொல்லும் ஸலாத்தை எனக்கு எத்திவைக்க பூமியிலே சுற்றித்திரியும் வானவர்கள் அல்லாஹ்விடமுள்ளனர்”.

அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி).

ஆதாரம் : நஸாஈ 1282 (இது ஸஹீஹான நபிமொழியாகும்)

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- நபி (ஸல்) அவர்களை சங்கை செய்யும் பொருட்டு இப்புவியில் அவர்கள் மீது ஸலாம் சொல்லும் முஸ்லிமான ஆண், பெண் இரு பாலாரினதும் ஸலாம்களை அன்னாருக்கும் எத்திவைக்கவென வானவர்களை இறைவன் ஏற்பாடு செய்திருக்கின்றான்.

2- எங்கள் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலாம் சொல்ல வேண்டும் என இந்த நபிமொழி வலியுறுத்துகின்றது.

3- தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலாம் சொல்லவதென்பது நல்லறங்களை சம்பாதித்துக் கொள்ளவும் அந்தஸ்த்துக்கள் உயர்வடையவும் காரணமாக அமைகின்றது.

(٦) عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "مَا أَسْفَلَ مِنْ الْكَعْبَيْنِ مِنْ الْإِزَارِ فَفِي النَّارِ" (صحيح البخاري ٥٧٨٧)

(6) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **“**கணுக்கால்களுக்குக் கீழே தொங்கும் (வகையில்) கீழங்கி(யை அணிகிறவர்) நரகத்தில் (புகுவார்)**”.**

அறிவிப்பவர் **:** அபூ ஹு ரைரா(ரலி)**.**

ஆதாரம் **:** புஹாரி 5787

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

ஆபூ ஹு ரைரா (ரலி) என்பது இவரின் புனைப்பெயராகும் அவரின் பெயர் அப்துர் ரஹ்மான் பின் ஸக்ர் ஆகும்**.** ஹிஜ்ரி 7ம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றார்**.** பின்னர் தொடர்ந்து 4 வருடங்கள் நபிகளாருடனே இருந்தார்கள்**,** இதனால் நபிகளாரைத் தொட்டும் 5374 ஹதீஸ்களை அறிவித்து நபித்தோழர்களில் மிகக் கூடுதலான நபிமொழிகளை அறிவித்தவர் என்ற பெயருக்கு சொந்தமானார்**.** ஹிஜ்ரி 57ம் ஆண்டு

மதீனாவில் மரித்து பகீஉல் கர்கதில் அடக்கம் செய்யப்பட்டார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- கணுக்கால்களுக்குக் கீழே தொங்கும் (வகையில்) கீழங்கிகளை அணிவதனை இந்த நபிமொழி வன்மையாக கண்டிக்கின்றது. இந்த தடை ஆண்களுக்கு மாத்திரமாகும்.

2- இஸ்லாத்தின் ஆடை ஒழுங்குகளுக்கு ஏற்ப ஒரு முஸ்லிமின் ஆடை அமையவேண்டும்.

3- கணுக்கால்களுக்குக் கீழே தொங்கும் (வகையில்) கீழங்கிகளை அணிவதனை தவிர்ப்பது அவசியமாகும். அது நரகத்திற்கு நுழைவதற்கான ஒரு காரணமாகும்.

(٧) عَنْ جَابِرٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ يَقُوْلُ : سَمِعْتُ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ : "الْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ"

(صحيح مسلم ٦٥)

**(7)** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **"**பிற முஸ்லிம்கள் எவருடைய நாவு**,** கையின் தொல்லைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுகிறார்களோ அவரே முஸ்லிமாவார்**".**

அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 65

**✐ஹதீஸ் அறிவிப்பாளர்:**

ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அகபா உடன்படிக்கை நடைபெற்ற இரவு இஸ்லாத்தை ஏற்றார். நபிகளாரைத் தொட்டும் 1540 நபி மொழிகளை அறிவித்த இவர் ஹஜ்ரி 73ம் ஆண்டு மரணமடைந்தார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- எந்த விதத்திலும் மற்ற மக்களை துன்புறுத்துவதிலிருந்து தவிர்ந்து நடக்க வேண்டும்.

2- ஒரு முஸ்லிம் தன் சகோதர முஸ்லிமை கண்ணியப்படுத்துவதும் அவனை நேசிப்பதும் அவனுக்கு உதவி செய்வதும் அவசியமாகும்.

3- எவனுடைய சொல், செயல் மற்றும் நடத்தை என்பவற்றிலிருந்து மற்றவர்கள் துன்புற வில்லையோ அவனே முஸ்லிம்களில் சிறந்தவனாவான்.

(٨) عَنْ أَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : سَمِعْتُ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ : "قَالَ اللّٰه تَعَالَى : أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ ، مَنْ عَمِلَ عَمَلاً أَشْرَكَ فِيهِ مَعِي غَيْرِي تَرَكْتُهُ وَشِرْكَهُ"
(صحيح مسلم ٢٩٨٥)

(8) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “வளமும் உயர்வும் மிக்க அல்லாஹ் கூறினான் : நான் இணையாளர்களை விட்டும் இணைகற்பித்தலை விட்டும் அறவே தேவையற்றவன். யாரேனும் என்னுடன் பிறரையும் இணையாக்கி (எனக்காகவும், பிறருக்காகவும்) நற்செயல் புரிந்தால் அவனையும் அவனது இணைவைப்பையும் (தனியே) விட்டு விடுவேன்”

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2985.

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- அல்லாஹ்விற்கு இணை கற்பிக்கும் அனைத்து விதமான காரண காரியங்களிலிருந்தும் அவசியம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

2- அல்லாஹ்விற்கு இணை கற்பிக்கும் செயல் நல்லறங்களையும் அதன் கூலியையும் முழுமையாக இல்லாதொழித்துவிடும்.

3- இணைவைத்தல் என்பது அல்லாஹ் மன்னிக்காத ஒரு பாவமாகும். அதனை செய்தவன் பாவமீட்சி பெற்றாலே தவிர இறைவன் அதனை மன்னிக்கமாட்டான்.

(٩) عَنْ عَائِشَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا زَوْجِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنِ النبيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "إِنَّ الرِّفْقَ لاَ يَكُونُ فِي شَيْءٍ إِلاَّ زَانَهُ ، وَلاَ يُنْزَعُ مِنْ شَيْءٍ إِلاَّ شَانَهُ" (صحيح مسلم ٢٥٩٤)

(9) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “மென்மை எதில் இருந்தாலும் அதை அது அழகாக்கிவிடும், மென்மை அகற்றப்பட்ட எந்த ஒன்றும் அலங்கோலமாகிவிடும்.”

அறிவிப்பவர் : நபியவர்களின் துணைவியார் ஆயிஷா(ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2594.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஆருயிர்த் தோழரும், அருமை நண்பருமான அபூபக்கர் (ரலி) அவர்களின் செல்வப் புதல்வி தான் அன்னை ஆயிஷா (ரலி) ஆவார்கள். நபியவர்கள் மரணிக்கும் போது அன்னாருக்கு வயது 18 ஆகும். மிகச் சிறந்த அறிவாளியாகவும், அதிக ஞாபகசக்தியும் பெற்றுத் திகழ்ந்த அன்னையவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் மிக நீண்ட காலங்கள்

வாழ்ந்திருந்ததன் காரணமாக, 2210 நபிமொழிகளையும் நமக்கு அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். அன்னையவர்கள் ஹிஜ்ரி 57 அல்லது 58 ல் மதீனாவில் மரணித்து பகிஉல் கர்கதில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- அழைப்புப் பணி, பிள்ளை வளர்ப்பு, கற்றுக் கொடுத்தல் மற்றும் இதர காரியங்களின் போது மென்மை, நலினம் என்பவற்றை கைக்கொள்வதன் மூலம் அவற்றை திறம்பட செய்ய முடியும்.

2- எப்பொழுதும் மென்மை நல்லவற்றை ஈட்டித்தரும். வன்மை தீமையையே தோற்றுவிக்கும்.

3- மென்மை கைக்கொள்வதன் மூலம் எவ்விடயத்தையும் அழகாக செய்து முடிக்கலாம்.

(١٠) عَنْ أَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مَنْ حَلَفَ عَلَى يَمِيْنٍ فَرَأَى غَيْرَهَا خَيْراً مِنْهَا فَلْيَأْتِ الَّذِيْ هُوَ خَيْرٌ وَلْيُكَفِّرْ عَنْ يَمِيْنِهِ" (صحيح مسلم ١٦٥٠)

(10) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஒருவர் ஒரு சத்தியம் செய்து விட்டு அதல்லாத வேறொன்றை அதைவிடச் சிறந்ததாகக் கருதும்பட்சத்தில் அந்தச் சிறந்ததையே அவர் செய்யட்டும். சத்தியமுறிவுக்காகப் பரிகாரம் செய்யட்டும்."

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 1650

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- எப்பொழுதும் நல்லவற்றின் பாலும் எளிமையானவற்றின் பாலுமே செல்வது அவசியமாகும்.

2- எவர் சத்தியம் செய்து அதனை முறித்துவிடுகின்றாரோ அவர் அல்குர்ஆன் கூறும் சத்தியத்திற்கான தண்டப் பரிகாரத்தை நிறைவேற்ற

வேண்டும் : உங்கள் சத்தியங்களில் வீணானவற்றிற்காக அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிக்க மாட்டான். எனினும் (ஏதாவது ஒன்றை) உறுதிப்படுத்தச் செய்யும் சத்தியங்களுக்காக (அவற்றில் தவறினால்) உங்களைப் பிடிப்பான். (எனவே சத்தியத்தை முறித்தால்) அதற்குரிய பரிகாரமாவது, உங்கள் குடும்பத்தினருக்கு நீங்கள் கொடுக்கும் ஆகாரத்தில் நடுத்தரமானதைக் கொண்டு பத்து ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும், அல்லது அவர்களுக்கு ஆடை அணிவிக்க வேண்டும், அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். ஆனால் (இம் மூன்றில் எதனையும்) ஒருவர் பெற்றிராவிட்டால் (அவர்) மூன்று நாட்கள் நோன்பு நோற்க வேண்டும். நீங்கள் சத்தியம் செய்யும் பொழுது இதுவே உங்கள் சத்தியங்களின் பரிகாரமாகும். உங்கள் சத்தியங்களை (முறித்து விடாமல்) பேணிக் காத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு அவன் தன் அத்தாட்சிகளை - ஆயத்துக்களை - உங்களுக்கு இவ்வாறு விளக்குகிறான். (மாயிதா 89)

3- அதிகம் சத்தியம் செய்வதனை தவிர்ந்து கொள்ளவேண்டும்.

(١١) عَنْ أَنَسٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ سُئِلَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنْ الْكَبَائِرِ قَالَ : "الْإِشْرَاكُ بِاللَّهِ وَعُقُوقُ الْوَالِدَيْنِ وَقَتْلُ النَّفْسِ وَشَهَادَةُ الزُّورِ" (صحيح البخاري ٢٦٥٣)

(11) நபி(ஸல்) அவர்களிடம் பெரும் பாவங்கள் பற்றிக் கேட்கப்பட்டது. நபி(ஸல்) அவர்கள், “அல்லாஹ்வுக்கு இணை வைப்பது, பெற்றோருக்குத் துன்பம் கொடுப்பது, கொலை செய்வது, பொய்சாட்சி சொல்வது ஆகியன (பெரும் பாவங்களாகும்)” என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ்(ரலி).

ஆதாரம் : புஹாரி 2653

## ✎ஹதீஸ் அறிவிப்பாளர்:

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் நபிகளாரின் பணியாளர் என்று அழைக்கப்பட்டார். ஹிஜ்ரத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் மதீனாவில் பிறந்த இவர் சிறு வயதிலேயே இஸ்லாத்தை ஏற்றார். நபிகளாரைத் தொட்டும் 2286 ஹதீஸ்களை அறிவித்தார். தனது 100வது வயதைத் தாண்டிய பின்னர் ஹிஜ்ரி 93ம் ஆண்டு பஸ்ராவில் காலமானார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- மேற்கூறப்பட்ட பாவங்களில் ஈடுபடுவதனை இந் நபிமொழி வன்மையாக எச்சரிக்கை செய்கின்றது, ஏனெனில் அவை பெரும் பாவங்களில் உள்ளவையாகும்.

2- மேற்கூறிய பாவங்களில் ஈடுபடுவதனால் அடிப்படைக் கொள்கை, மார்க்கம், ஒழுக்கம் மற்றும் சமூகம் சார்ந்த சீர்கேடுகள் நிறையவே ஏற்படுகின்றன.

3- ஒரு மனிதன் பெறும் பாவங்களில் ஈடுபடுவனால் அவனுக்கும் அவனுடைய இரட்சகனுக்கும் இடையிலான தொடர்பும் அவன் குடும்பம் மற்றும் அவன் சார்ந்திருக்கும் சமூகத்திற்கிடையிலான தொடர்புகளும் சீரற்றுப் போய்விடுகின்றன. இவ்வுலகிலும் மறுமையிலும் அவன் சீர்கெட்டவனாக மாறிவிடுகின்றான். இறைவனிடத்தில் அவன் பாவமீட்சி பெற்றாலே அன்றி அதனை இறைவன் மன்னிக்க மாட்டான்.

(١٢) عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "مَنْ يَضْمَنْ لِي مَا بَيْنَ لَحْيَيْهِ وَمَا بَيْنَ رِجْلَيْهِ أَضْمَنْ لَهُ الْجَنَّةَ" (صحيح البخاري ٦٤٧٤)

(12) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “தம் இரண்டு தாடைகளுக்கு இடையே உள்ளத(ான நாவி)ற்கும், தம் இரண்டு கால்களுக்கு இடையே உள்ளத(ான மர்ம உறுப்பி)ற்கும் என்னிடம் உத்தரவாதம் அளிப்பவருககு நான் சொர்க்கத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறேன்.”

அறிவிப்பவர் : ஸஹ்ல் பின் ஸஃது (ரலி).

ஆதாரம் : புஹாரி 6474

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அபுல் அப்பாஸ் என்ற புனைப் பெயருக்குரியவர். நபிகளாரைத் தொட்டும் 188 ஹதீஸ்களை அறிவித்த இவர் தனது 100ம் வயதில் ஹிஜ்ரி 91ல் மதீனாவில் மரணமடைந்தார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- எப்பொழுதும் நற்குணத்தினைக் கைக்கொள்வதன் அவசியத்தை இந்த நபி மொழி வலியுறுத்துகின்றது.

2- தடுக்கப்பட்டவற்றிலிருந்து நாவையும் மர்ம உறுப்பினையும் பாதுகாப்பது சுவனம் செல்தற்கான ஒரு வழியாகும்.

3- இறைவன் அங்கீகரித்த சொல், செயல், தொடர்புகளில் மாத்திரம் அவற்றை உபயோகிப்பதன் அவசியம் இந்நபி மொழியில் உணர்த்தப்படுகின்றது.

(١٣) عَنْ حُذَيْفَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : "لا يَدْخُلُ الجَنَّةَ نَمَّامٌ" (صحيح مسلم ١٦٨)

(13) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "கோள் சொல்லித் திரிபவன் சுவனம் நுழைய மாட்டான்"

அறிவிப்பவர் : ஹுதைபா (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 168

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

ஹுதைபா பின் யமான் (ரலி) - நபிகளாரின் அந்தரங்கச் செயலாளர் என்றழைக்கட்டவர் இஸ்லாமிய யுத்தங்களில் பெறும் பங்காற்றியவர். நபிகளாரைத் தொட்டும் 255 ஹதீஸ்களை அறிவித்தவர், ஹிஜ்ரி 36ம் ஆண்டு ஈராக்கில் இறையடி சேர்ந்தார்கள்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- கோள் சொல்வது மக்களுக்கு மத்தியல் விரோதத்தை உண்டு பண்ணக்கூடிய ஓர் இழிவான பன்பாகும்.

2- கோள் சொல்வது சமூகத்தில் கலக்கத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும்.

3- கோள் சொல்வதை அனுமதிக்கப்பட்டதாக நினைத்து கோள் சொல்லித் திரிபவன் சுவனம் நுழைய மாட்டான்.

(١٤) عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "حُجِبَتْ النَّارُ بِالشَّهَوَاتِ وَحُجِبَتْ الْجَنَّةُ بِالْمَكَارِهِ" (صحيح البخاري ٦٤٨٧)

(14) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **"**மன இச்சைகளால் நரகம் மூடப்பட்டுள்ளது. சிரமங்களால் சொர்க்கம் மூடப்பட்டுள்ளது**"**.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி).

ஆதாரம் : புஹாரி 6487

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- நரகம் பாவமான காரியங்களினால் சூழப்பட்டுள்ளது,

2- மனம் போன போக்கில் தடுக்கப்பட்டவற்றை செய்து தனது வாழ்வை களிப்பவனுக்கு நரகம் செல்வது இலகுவான காரியமாகும்.

3- இஸ்லாத்தின் போதனைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமே சுவனம் செல்ல முடியும்.

4- அதே போன்று பாவங்களை விடுவதன் மூலமே நரக விடுதலை பெறமுடியும்.

(١٥) عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "لا يَدْخُلُ الجَنَّةَ مَنْ لاَ يَأْمَنُ جَارُهُ بَوَائِقَهُ" (صحيح مسلم ٧٣)

(15) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “எவருடைய நாச வேலையிலிருந்து அவருடைய அண்டை வீட்டார் பாதுகாப்புணர்வு பெறவில்லையோ அவர் சொர்க்கத்தில் நுழையமாட்டார்”.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 73

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- எந்த விதத்திலும் அண்டை வீட்டாரை துன்புறுத்துவதிலிருந்து தவிர்ந்து நடக்க வேண்டும்.

2- அண்டை வீட்டாரை கண்ணியப்படுத்துவன் அவசியம் உணர்த்தப்படுகின்றது. அது நரக விடுதலைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

3- அண்டை வீட்டாரை நோவினை செய்யாமலிருப்பது ஈமான் மற்றும் நற்குணம் என்பவற்றின் பூரணத்துவத்தினை பிரதிபலிக்கும்.

4- அண்டை வீட்டாருக்கு கெடுதல் செய்வது சிலபோது நரக வேதனைக்கு இட்டுச்செல்லும் இறை நிராகரிப்புக்கு வழிவகுக்கும்.

(١٦) عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ مَسْعُوْدٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "لاَ يَدْخُلُ الجَنَّةَ مَنْ كَانَ فِي قَلْبِهِ مِثْقَالُ ذَرَّة مِنْ كِبْرٍ"
(صحيح مسلم ١٤٩)

(16) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **"**எவருடைய உள்ளத்தில் அணுவளவு தற்பெருமையுள்ளதோ அவர் சுவனம் நுழையமாட்டார்**".**

அறிவிப்பவர் **:** இப்னு மஸ்ஊத் (ரலி)**.**

ஆதாரம் **:** முஸ்லிம் 149

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- பெருமை தடுக்கப்பட்ட ஒரு பாவமாகும். அதிலிருந்து தவிர்ந்து நடப்பது அவசியமாகும். பெருமையென்பது: உண்மையை மறைப்பதும் மற்றவர்களை தாழ்வாகக் கருதுவதுமாகும்.

2- பெருமை எல்லா சந்தர்ப்பத்திலும் எல்லா காலத்திலும் நிந்திக்கப்பட்ட ஒரு குணமாகும். பெருமையுள்ளவன் சுவனம் நுழையமாட்டான்.

3- பணிவு, வாய்மையை ஏற்றல் என்பன உண்மையான விசுவாசிகளின் பண்புகளாகும், பெருமை இப்லீஸின் குணமாகும்.

(١٧) عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللّٰهِ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قَالَ : سَمِعْتُ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ : "مَنْ لَقِيَ اللّٰهَ لَا يُشْرِكُ بِهِ شَيْئاً دَخَلَ الْجَنَّةَ وَمَنْ لَقِيَهُ يُشْرِكُ بِهِ دَخَلَ النَّارَ (صحيح مسلم ١٥٢)

(17) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **“**யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவனம் நுழைவார், யார் அவனுக்கு இணைவைத்தவராக அவனை சந்திக்கிறாரோ அவர் நரகம் நுழைவார்**”.**

அறிவிப்பவர் : ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 152

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- அல்லாஹ்வை ஒருமைப் படுத்துவதும் அவனை மாத்திரம் இணையின்றி வணங்குவதும் சுவனம் செல்வதற்கான ஒரு வழியாகும்.

2- அல்லாஹ்விற்கு இணை கற்பிப்பது நரகம் நுழைவதற்கான ஒரு காரணமாகும்.

3- இந்த நபி மொழி ஏகத்துவத்தின் அவசியத்தையும் இணை கற்பிப்பதிலிருந்து தவிர்ந்து நடக்க வேண்டியதன் கட்டாயத்தையும் வலியுறுத்துகின்றது.

(١٨) عَنِ الْعَبَّاسِ بْنِ عَبْدِ الْمُطَّلِبِ رَضِيَ اللّٰهُ عَنْهُ أَنَّهُ سَمِعَ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ : "ذَاقَ طَعْمَ الْإِيْمَانِ مَنْ رَضِيَ بِاللّٰهِ رَبًّا وَبِالْإِسْلَامِ دِيْناً وَبِمُحَمَّدٍ رَسُوْلاً (صحيح مسلم ٥٦)

**(18) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மத் (ஸல்) அவர்களை இறைத்தூதராகவும் மனநிறைவோடு ஏற்றுக்கொள்கிறாரோ அவர் இறைநம்பிக்கையின் சுவையை அடைந்து விட்டார்".**

அறிவிப்பவர் : அப்பாஸ் இப்னு அப்தில்முத்தலிப் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 56

✍ **ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அப்பாஸ் இப்னு அப்தில்முத்தலிப் (ரலி)

அபுல் பழ்லு என்ற புனைப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டார், நபிகளாரின் தந்தையின் சகோதரராவார். பத்ரு யுத்தத்தின் பின்னர் இஸ்லாத்தை ஏற்று ஆரம்பத்தில் இஸ்லாத்தை மறைத்துக் கொண்டிருந்தார். பத்ஹு மக்காவிற்கு சற்று முன்னர் மதீனாவிற்கு ஹிஜ்ரத் மேற்கொண்ட இவர் ஹிஜ்ரி 32 இறையடி சேர்ந்து பகீஉல் கர்கதில் அடக்கம் செய்யப்பட்டார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1-அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மத் (ஸல்) அவர்களை இறைத்தூதராகவும் மனநிறைவோடு ஏற்றுக்கொள்வதன் அவசியம் இந்த நபிமொழியில் உணர்த்தப்படுகின்றது.

2-ஈமானின் சுவை உள்ளத்தில் நுழைந்து விட்டால் இஸ்லாத்தின் போதனைகளை நடைமுறைப்படுத்துவது எளிதாகிவிடுகின்றன.

**3-ஈமானின் சுவையென்பது வழிபாடுகளில் ஆர்வம் செலுத்துவதன் மூலமே பெறப்படுகின்றது.**

(١٩) عَنْ أُمِّ حَبِيبَةَ رَضِيَ اَللَّهُ عَنْهَا زَوْجِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَتْ : سَمِعْتَ اَلنَّبِيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ : "مَنْ صَلَّى اِثْنَتَيْ عَشْرَةَ رَكْعَةً فِي يَوْمٍ وَلَيْلَةٍ بُنِيَ لَهُ بِهِنَّ بَيْتٌ فِي اَلْجَنَّةِ" (صحيح مسلم ١٠١)

(19) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **"**எவர் இரவிலும் பகலிலும் (சுன்னத்தாக உள்ள) பன்னிரெண்டு ரக்அத்துக்கள் தொழுகிறாரோ, அதன் காரணமாக அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு வீடு கட்டப்படுகிறது**"**

அறிவிப்பவர் : நபியவர்களின் துணைவியார் உம்மு ஹபீபா(ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 101

🖉 **ஹதீஸ் அறிவிப்பாளர்:**

உம்மு ஹபீபா (ரலி)

மு∴மின்களின் அன்னையர்களில் ஒருவரான இவரின் பெயர் ரம்ளா பின்து அபீஸு ப்யான் என்பதாகும். முஆவியா (ரலி) அவர்களின் சகோதரியாவார், நபிகளாரைத் தொட்டும் 65 ஹதீஸ்களை அறிவித்த இவர் ஹிஜ்ரி 44ம் ஆண்டு மதீனாவில் மரணமடைந்து பகீஉல் கர்கதில் அடக்கம் செய்யப்பட்டார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- இந்த நபிமொழியில் முன்பின் சுன்னத்துக்களின் சிறப்புப் பற்றி வலியுறுத்தப்படுகின்றது. அவை: லுஹருக்கு முன்னர் நான்கு ரக்அத்துக்களும் அதன் பின்னர் இரண்டு ரக்அத்துக்களும் ம∴ரிபுக்கு பின்னர் இரண்டு ரக்அத்துக்களும் இஷாவிற்கு பின்னர் இரண்டு ரக்அத்துக்களும் பஜ்ருக்கு முன்னர் இரண்டு ரக்அத்துக்களுமாகும்.

2- முன்பின் சுன்னத்துக்களை சரிவரப் பேணுபருக்கு இந் நபிமொழியில் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்டுள்ளது.

3- இறை விசுவாசியின் ஈமான் அதிகரிக்கவும் அவன் இறைவனிடம் நெருங்குவதற்குமே இத்தொழுகை மார்க்கமயமாக்கப்பட்டுள்ளது.

[illegible]

(20) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : "எவர் லுஹர் தொழுகைக்கு முன்பு நான்கு ரக்அத்துக்களையும், அதற்குப் பின்பு நான்கு ரக்அத்துகளையும் பேணித் தொழுகின்றாரோ, அல்லாஹ் அவர் மீது நரக நெருப்பை விலக்கி விட்டான்"

அறிவிப்பவர் : நபியவர்களின் துணைவியார் உம்மு ஹபீபா(ரலி).

ஆதாரம் : திர்மிதி 428 (இமாம் திர்மிதி இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்).

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- லுஹருக்கு முன்னரும் பின்னரும் நான்கு ரக்அத்துக்களை சுன்னத்தாகத் தொடர்ந்து தொழுவதனை இந்த ஹதீஸ் வலியுறுத்துகின்றது.

2- சுன்னத்தான வழிபாடுகளை செய்வதன் மூலம் இறைவனை நெருங்க முடியும்.

3- இஸ்லாத்தின் போதனைகளை பின்பற்றுவதுடன் இந்த நான்கு ரக்அத்துக்களையும் பேணித் தொழுபருக்கு நரக விடுதலை என்ற நற்செய்தி சொல்லப்பட்டுள்ளது.

(٢١) عَنْ جَابِرٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ :
"إِذَا قَضَى أَحَدُكُمْ صَلاَتَهُ فِي مَسْجِدِهِ فَلْيَجْعَلْ لِبَيْتِهِ نَصِيباً مِنْ صَلاَتِهِ ؛
فَإِنَّ اللّٰهَ جَاعِلٌ فِي بَيْتِهِ مِنْ صَلاَتِهِ خَيْراً" (صحيح مسلم ٧٧٨)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “உங்களில் ஒருவர் பள்ளியில் (பர்ள்) தொழுது முடிந்ததும் தமது தொழுகையில் சிலவற்றை (கூடுதல் தொழுகையை) தமது வீட்டிலும் தொழட்டும் ஏனெனில் அவ்வாறு அவர் தொழுவதால் அவரது வீட்டில் அல்லாஹ் நன்மையை உருவாக்குகின்றான்”

அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 778.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- சுன்னத்தான தொழுகைகளை வீடுகளில் மேற்கொள்வதன் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது.

2- சுன்னத்தான தொழுகைகளை தொடர்ந்தும் வீடுகளில் மேற்கொள்வதனால் அவ்வீடுகளில் நலவுகளும் இரண அபிவிருத்தியும் நிறைந்துவிட காரணமாகின்றன.

3- இஸ்லாமிய கண்ணோட்டத்தில் வீடென்பது வசிப்பதற்கும் வழிபடுவதற்கும் பிள்ளை வளர்ப்பிற்குமான ஓர் இடமாகும்.

(٢٢) عَنْ أَبِيْ قَتَادَةَ بْنَ رِبْعِيٍّ الْأَنْصَارِيَّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ : قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "إِذَا دَخَلَ أَحَدُكُمْ الْمَسْجِدَ فَلَا يَجْلِسْ حَتَّى يُصَلِّيَ رَكْعَتَيْنِ" (صحيح البخاري ١١٦٣)

**(22) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : "உங்களில் ஒருவர் பள்ளியில் நுழைந்ததும் இரண்டு ரக்அத்கள் தொழாமல் உட்கார வேண்டாம்".**

அறிவிப்பவர் : அபூ கதாதா (ரலி).

ஆதாரம் : புஹாரி 1163.

**🖉ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அபூ கதாதா பின் ரிப்ஈ அல் அன்ஸாரி என்பது இவரின் முழுப்பெயராகும். பல யுத்தங்களில் கலந்து கொண்ட இவர் நபிகளாருடன் நிறைய பயணங்களில் இருந்திருக்கின்றார். அவர் கூபாவில் ஹிஜ்ரி 38ல் மரணமடைந்து அலி (ரலி) அவர்கள் தொழுகை நடத்தியதாகவும் - ஹிஜ்ரி 54ல் மதீனாவில் மரணமடைந்ததாகவும் இரு வேறு அறிவுப்புக்கள் வந்துள்ளன.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- பள்ளியில் நுழைந்தவர் உட்கார முன்னர் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவது பள்ளி வாயிலின் ஒழுங்களில் உள்ளதாகும். அது இமாம் ஜூம்ஆ பிரசங்கம் செய்கின்ற போதிலும் சரியே.

2- ஜமாஅத் தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டால் தனிப்பட்ட விதத்தில் தொழுகையில் ஈடுபடமுடியாது.

3- பள்ளி வாயிலில் அமர முன்னர் இத்தொழுகையை மேற்கொள்வது அவசியமாகும்.

(٢٣) عَنْ أَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مَنْ تَوَضَّأَ فَأَحْسَنَ الوُضُوءَ ثُمَّ أَتَى الجُمُعَةَ ، فَاسْتَمَعَ وأَنْصَتَ ، غُفِرَ لَهُ مَا بَيْنَهُ وَبَيْنَ الجُمُعَةِ وَزِيادَةُ ثَلاَثَةِ أَيَّامٍ ، وَمَنْ مَسَّ الحَصَى ، فَقَدْ لَغَا" (صحيح مسلم ٨٥٧)

(23) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “(வெள்ளிக்கிழமை) யார் அங்கத்தூய்மை (வுழூ) செய்து அதை செம்மையாகவும் செய்து ஜும்ஆவுக்கு வந்து (இமாமின் உரையை) செவிதாழ்த்தி மௌனமாகக் கேட்கிறாரோ அவருக்கு அந்த ஜும்ஆவிலிருந்து அடுத்த ஜும்ஆ வரைக்கும், மேற்கொண்டு மூன்று நாட்களுக்கும் ஏற்படுகின்ற (சிறு பாவங்கள் யாவும்) மன்னிக்கப்படுகின்றன. யார் (இமாம் உரை நிகழ்த்தும் போது தரையில் கிடக்கும்) சிறுகற்களைத் தொட்டு (விளையாடி)க் கொண்டிருக்கிறாரோ அவர் வீணான செயலில் ஈடுபட்டுவிட்டார்”.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி). ஆதாரம் : முஸ்லிம் 857

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- ஜு ம்ஆவுக்காக செம்மையாக வுழூ செய்து, பிரசங்கத்தை நல்ல விதத்தில் செவிமடுப்பதும் வணக்க வழிபாடுகளை உளத்தூய்மையுடனும் மனஅமைதியுடனும் நிறைவேற்றுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2- ஜு ம்ஆத் தொழுகையின் சிறப்பு, அது சிறு பாவங்களுக்கு பரிகாரமாக அமைகின்றது.

3- ஜு ம்ஆ பிரசங்கத்தின் போது வீண் விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

(٢٤) عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ : كَانَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يُصَلِّي مِنْ اللَّيْلِ مَثْنَى مَثْنَى وَيُوتِرُ بِرَكْعَةٍ وَيُصَلِّي الرَّكْعَتَيْنِ قَبْلَ صَلَاةِ الْغَدَاةِ وَكَأَنَّ الْأَذَانَ بِأُذُنَيْهِ (أَيْ بِسُرْعَةٍ) أَيْ : يُخَفِّفُهُمَا. (صحيح البخاري ٩٩٥)

(24) நபி(ஸல்) அவர்கள் இரவில் இரண்டிரண்டு ரக்அத்களாகத் தொழுவார்கள். ஒரு ரக்அத்தைக் கொண்டு அவற்றை ஒற்றையாக்குவார்கள். பாங்கு சொல்லி முடித்தவுடன் பஜ்ருக்கு முன்னால் விரைந்து இரண்டு ரக்அத்களைத் தொழுவார்கள்"

அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி).

ஆதாரம் : புஹாரி 995

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- இரவுத் தொழுகை இரண்டு இரண்டு ரக்அத்துக்களாகவே நிறைவேற்ற வேண்டும். அவ்வாறே பகல் தொழுகையும் நிறைவேற்றப்படவேண்டும்.

2- வித்ரு தொழுகையின் குறைந்தது ஒரு ரக்அத்தாகும்.

3- பஜ்ரின் முந்திய சுன்னத் இரண்டு ரக்அத்துக்கள் சுருக்கமாகவும் எளிமையாகவும் மேற்கொள்வது சிறந்ததாகும்.

(٢٥) عَنْ أَبِيْ مُوْسَى الأَشْعَرِيِّ رَضِيَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "إِنَّ اللّٰه تَعَالَى يَبْسُطُ يَدَهُ بالليلِ لِيَتُوبَ مُسِيءُ النَّهَارِ ، ويَبْسُطُ يَدَهُ بالنَّهَارِ لِيَتُوبَ مُسِيءُ اللَّيلِ ، حَتَّى تَطْلُعَ الشَّمْسُ مِنْ مَغْرِبِهَا" (صحيح مسلم ٢٧٥٩).

(25) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “நிச்சயமாக இறைவன் பகலில் தவறிழைப்பவர் பாவமீட்சி பெற இரவிலே தனது கையை விரிக்கின்றான், இரவில் தவறிழைப்பவர் பாவமீட்சி பெற பகலிலே தனது கையை விரிக்கின்றான் (அது) சூரியன் மேற்கிலிருந்து உதிக்கும் வரை (நடைபெறும்)”

அறிவிப்பவர் : அபூ மூஸா அல்அஷ்அரி (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் (2759)

🖊 **ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அவர் பெயர் அப்துல்லாஹ் பின் கைஸ் அல் அஷ்அரீ, யமன் தேசத்தைச் சேர்ந்த இவர் ஆரம்பத்தில் மக்காவிற்கு வந்து இஸ்லாத்தை ஏற்று யமனுக்கு திரும்பிவிட்டார். கைபர் வெற்றியின் பின்னர் மதீனாவிற்கு வந்து சேர்ந்தார். நபித்தோழர்களில் மிக அழகான குரலில் அல்குர்ஆனை ஓதக்கூடிய இவர் அதிக வணக்க வழிபாடுகளில் ஈடுபடுபவராக இருந்தார். ஹிஜ்ரி 44ல் மதீனா அல்லது கூபாவில் மரணத்தை எய்தினார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

**1-** இரவு, பகல் பாராது எந்த நேரத்திலும் உண்மையான பாவமீட்சியினை இந்த நபிமொழி ஆர்வமூட்டுகின்றது.

**2-** முடிந்தளவு சீக்கிரமாக மனிதன் பாவமீட்சியின் பக்கம் திரும்ப வேண்டும். ஏனெனில் எந்நேரமும் அவனது மரணம் அவனை வந்தடையலாம்.

**3-** சூரியன் மேற்கில் உதயமாகும் வரை பாவமீட்சியின் வாயில் திறக்கப்பட்டுள்ளது.

**4-** பாவமீட்சியின் விடயத்தில் அல்லாஹ்வின் கருணையின் விசாலம் மிகவும் பெரியது. மனிதன் தனது மரண வேளையின் அடையாளங்கள் தென்பட முன்னர் பாவமீட்சியில் ஈடுபடவேண்டும்.

(٢٦) عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مَنْ لَمْ يَدَعْ قَوْلَ الزُّورِ وَالْعَمَلَ بِهِ فَلَيْسَ لِلَّهِ حَاجَةٌ فِي أَنْ يَدَعَ طَعَامَهُ وَشَرَابَهُ" (صحيح البخاري ١٩٠٣)

(26) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “பொய்யான பேச்சையும் பொய்யான நடவடிக்கைகளையும்விட்டு விடாதவர் தம் உணவையும் பானத்தையும் விட்டு விடுவதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையுமில்லை”

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி).

ஆதாரம் : புஹாரி 1903.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- ஒரு முஸ்லிம் நற்குணத்தை தன்னகத்தே கொண்டவனாகவும் தீய நடத்தைகளை விட்டும் அப்பாறப்பட்டவனாகவும் இருக்க வேண்டும்.

2- பொய் சொல்வதனையும் அதன் படி நடந்து கொள்வதனையும் ஒரு முஸ்லிம் தவிர்க்கவில்லையாயின் அவன் நோற்கும் நோன்பிற்கான முழு பலனையும் இழந்துவிடுகின்றான்.

3- புறம், கோள், பொய், போன்ற தீய குணங்களிலிருந்து விடுபடுவதும் நோன்பின் போது நோக்கத்தக்க அம்சங்களாகும்.

(٢٧) عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُولُ اَللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مَنْ نَسِيَ وَهُوَ صَائِمٌ، فَأَكَلَ أَوْ شَرِبَ، فَلْيُتِمَّ صَوْمَهُ، فَإِنَّمَا أَطْعَمَهُ اَللَّهُ وَسَقَاهُ" (صحيح مسلم ١١٥٥).

**(27) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : "எவர் நோன்பிருக்கும் நிலையில் மறதியாக உண்ணுகிறாரோ, பருகுகிறாரோ அவர் தம்முடைய நோன்பைப் பூர்த்தியாக்கிக் கொள்ளட்டும். (நோன்பை முறித்து விட வேண்டாம்). ஏனெனில், அல்லாஹ்வே அவரை உண்ணச் செய்தான் பருகச் செய்தான்".**

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 1155)

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- இஸ்லாம் காருன்யத்தினை வரவேற்கும் மார்க்கமாகும். ஒரு முஸ்லிம் மறதியின் போது செய்கின்றவற்றிற்கு இறைவன் குற்றம் பிடிக்கமாட்டான். நோன்பின் போது அவன் மறதியாக உண்டு, பருகுவதனால் அவனது நோன்பு முறிந்து விடமாட்டாது.

2- எனினும் ஒரு நோன்பாளி இயன்றளவு தன் நோன்பு பற்றி விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

(٢٨) عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُولُ اَللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "أَفْضَلُ الصِّيَامِ بَعْدَ رَمَضَانَ : شَهْرُ اللهِ الْمُحَرَّمُ ، وَأَفْضَلُ الصَّلَاةِ بَعْدَ الفَرِيضَةِ : صَلَاةُ اللَّيْلِ" (صحيح مسلم ١١٦٣)

(28) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **"**ரமழானுக்குப் பின்னால் சிறந்த நோன்பு அல்லாஹ்வுடைய மாதமான முஹர்ரம் மாத நோன்பாகும்**,** கடமையான தொழுகைக்குப் பின்னால் சிறந்த தொழுகை இரவுத்தொழுகையாகும்**"**

அறிவிப்பவர் **:** அபூ ஹுரைரா(ரலி)**.**

ஆதாரம் **:** முஸ்லிம் 1163**.**

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- முஹர்ரம் மாதத்தில் நோன்பு நோற்பது மற்றும் இராத் தொழுகை என்பவற்றின் முக்கியத்துவம்**.**

2- இராத் தொழுகையும் சுன்னத்தான நோன்பும் இறைவனை நெருங்குவதற்கான வழிகளாகும்**.**

(٢٩) عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "رَحِمَ اللَّهُ رَجُلًا سَمْحًا إِذَا بَاعَ وَإِذَا اشْتَرَى وَإِذَا اقْتَضَى" (صحيح البخاري ٢٠٧٦)

(29) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : "வாங்கும் பொழுதும் விற்கும் பொழுதும் வழக்குரைக்கும் பொழுதும் பெருந்தன்மையாக நடந்து கொள்ளும் மனிதருக்கு அல்லாஹ் அருள் புரிவானாக"

அறிவிப்பவர் : ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி).

ஆதாரம் : புஹாரி 2076.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- கொடுக்கல், வாங்கலின் போது பெருந்தன்மையுடன் நடப்பதனை இஸ்லாம் வரவேற்கின்றது.

2- மக்களின் அன்றாட நடவடிக்கைகளில் எளிமையினை கைக்கொள்வது இறை அருளையும் கருணையையும் பெறுவதற்கான முக்கிய காரணமாகும்.

3- உரிமைகளை மீளப் பெறும் போது நலினமாக நடந்து கொள்வதும் விட்டுக்கொடுப்பதும் இஸ்லாத்தில் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

(٣٠) عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُولُ اَللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "خَيْرُ يَومٍ طَلَعَتْ عَلَيْهِ الشَّمْسُ يَوْمُ الجُمُعَةِ : فِيهِ خُلِقَ آدَمُ ، وَفِيهِ أُدْخِلَ الجَنَّةَ ، وَفِيهِ أُخْرِجَ مِنْهَا" (صحيح مسلم ٨٥٤)

(30) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “சூரியன் உதிக்கும் தினங்களில் வெள்ளிக்கிழமையே சிறந்த நாளாகும், ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டதும், சுவனத்தில் நுழைவிக்கப்பட்டதும், அதிலிருந்து வெளியேற்றப்பட்டதும் அத்தினத்திலேதான்”

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 854.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- ஜு ம்ஆ தினத்தின் சிறப்பும் மகிமையும் அத்தினத்தில் நல்லறங்களை செய்வதனையும் இந் நபிமொழி தெளிவுபடுத்துகின்றது.

2- வரலாற்றில் இத்தினத்தில் முக்கிய நிகழ்வுகள் நடந்துள்ளன. உதாரணமாக ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டதும் அவர்கள் சுவனத்தில் நுழைந்ததும் அதிலிருந்து வெளியேற்றப்பட்டதும். மேலும் பல சம்பவங்கள் நடக்கவிருக்கின்றன உதாரணமாக மறுமை நாள். சுருங்கக் கூறின் ஜு ம்ஆ தினம் என்பது மகத்துவமிக்க ஒரு தினமாகும்.

3- விரும்பத் தகாத காரியங்களினால் இத்தினத்தினை வீணடிக்காமல் இருத்தல்.

(٣١) عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اَللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "إِذَا أَكَلَ أَحَدُكُمْ فَلْيَأْكُلْ بِيَمِينِهِ، وَإِذَا شَرِبَ فَلْيَشْرَبْ بِيَمِينِهِ، فَإِنَّ اَلشَّيْطَانَ يَأْكُلُ بِشِمَالِهِ، وَيَشْرَبُ بِشِمَالِهِ" (صحيح مسلم ٢٠٢٠)

(31) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : **"**நீங்கள் புசிக்கும்போது வலக்கரத்தால் புசியுங்கள். பருகும் போது வலக் கரத்தால் பருகுங்கள். ஏனெனில், நிச்சயமாக ஷைத்தான் தனது இடக் கரத்தால் புசிக்கிறான். மேலும் தனது இடக் கரத்தால் குடிக்கின்றான்**"**

அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2020.

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- உண்ணல், பருகல் என்பவற்றினை வலக்கரத்தினால் செய்வது அவசியமாகும்.

2- உண்ணல், பருகலின் போது ஷைத்தானை துயர்வதினை இந்நபி மொழி எச்சரிக்கின்றது.

3- வலக்கரம் எப்போதும் நல்ல காரியங்களுக்கும் இடக்கரம் அருவருப்பானவற்றினை நீக்குவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

(٣٢) عَنْ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ : قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "لَا تُسَافِرْ الْمَرْأَةُ إِلَّا مَعَ ذِي مَحْرَمٍ وَلَا يَدْخُلُ عَلَيْهَا رَجُلٌ إِلَّا وَمَعَهَا مَحْرَمٌ فَقَالَ رَجُلٌ يَا رَسُولَ اللَّهِ إِنِّي أُرِيدُ أَنْ أَخْرُجَ فِي جَيْشِ كَذَا وَكَذَا وَامْرَأَتِي تُرِيدُ الْحَجَّ فَقَالَ اخْرُجْ مَعَهَا" (صحيح البخاري ١٨٦٢)

(32) “மணமுடிக்கத்தகாத ஆண் துணையில்லாமல் ஒரு பெண் பயணம் செய்யக் கூடாது. மண முடிக்கத் தகாத ஆண் துணையுடன் பெண் இருக்கும்போதே ஆண்கள் அவளைச் சந்திக்க வேண்டும்” என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஒருவர், ‘இறைத்தூதர் அவர்களே! நான் இன்னின்ன ராணுவப் பிரிவுடன் புறப்பட இருக்கிறேன் என் மனைவி ஹஜ் செய்ய எண்ணுகிறார் (நான் என்ன செய்வது)? என்று கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள், நீரும் மனைவியுடன் (ஹஜ்ஜு க்குப்) புறப்படுவீராக! என்றனர்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி).

ஆதாரம் : புஹாரி (1862).

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1-ஒரு பெண் மணமுடிக்கத்தகாத ஆண் துணையில்லாமல் பயணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

2-குழப்பங்களிலிருந்தும் சிக்கல்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வதற்காக இஸ்லாம் ஓர் ஆண் அன்னியப் பெண்ணுடன் தனிமையில் இருப்பதனை தடைசெய்கின்றது.

3-மணமுடிக்கத்தகாத ஆணின்றி (மஹ்ரம்) அல்லது கணவனின்றி ஒரு பெண் ஹஜ் பயணத்தினையும் மேற்கொள்ள முடியாது.

(٣٣) عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ كَانَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا عَطَسَ وَضَعَ يَدَهُ أَوْ ثَوْبَهُ عَلَى فِيهِ ، وَخَفَضَ - أَوْ غَضَّ - بِهَا صَوْتَهُ (سنن أبي داود ٥٠٢٩) هذا حديث حسن صحيح.

**(33) நபி (ஸல்) அவர்கள் தும்மும் போது தனது கையை அல்லது ஆடையை தனது வாயில் வைத்து சப்தத்தைத் தாழ்த்திக் கொள்வார்கள்.**

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : அபூதாவூத் 5029 (இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளது).

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- அருகில் உள்ளவர் துன்புறா வன்னம் தும்மும் போது இடக்கரத்தால் அல்லது கைக்குட்டையினால் முகத்தை மூடிக்கொள்வது இஸ்லாம் கூறும் தும்மும் ஒழுங்குகளில் உள்ளதாகும்.

2- மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல், பொதுச் சூழல் மற்றும் சுகாதாரம் என்பவற்றினை பேணுதல்.

3- தும்மும் போது சப்தத்தினை தாழ்த்தல்.

(٣٤) عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُولُ اَللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "اَلتَّثَاؤُبُ مِنْ اَلشَّيْطَانِ فَإِذَا تَثَاءَبَ أَحَدُكُمْ فَلْيَكْظِمْ مَا اِسْتَطَاعَ" (صحيح مسلم ٢٩٩٤)

(34) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “கொட்டாவி ஷைத்தானிடமிருந்து வருவதாகும். எனவே எவருக்கேனும் கொட்டாவி வந்தால், அவர் அதை முடிந்த அளவு அடக்கிக் கொள்ளட்டும்”

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2994.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- கைக்குட்டை போன்றவற்றினால் இயன்றளவு கொட்டாவியை அடக்கிக் கொள்ளல்.

2- இஸ்லாமிய போதனைகளை எப்போதும் பின்பற்றி ஒழுகுவது பூரணத்துவத்தினதும் உயரிய குணத்தினதும் தலையாய அம்சமாகும்.

3- சப்தத்துடன் கொட்டாவி விடுவது வெறுக்கத்தக்க அம்சமாகும்.

(٣٥) عَنْ أَبِيْ طَلْحَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ أَنَّ رسُولَ اللّٰهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "لاَ تَدْخُلُ المَلاَئِكَةُ بَيْتاً فيهِ كَلْبٌ وَلاَ صُورَةٌ" (صحيح البخاري ٣٣٢٢)

(35) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “நாயோ உருவப் படமோ உள்ள வீட்டில் (இறைவனின் கருணையைக் கொண்டுவரும்) வானவர்கள் நுழைய மாட்டார்கள்”.

அறிவிப்பவர் : அபூ தல்ஹா (ரலி). ஆதாரம் : புஹாரி 3322.

**✐ஹதீஸ் அறிவிப்பாளர்:**

இவர் பெயர் ஸைத் பின் ஸஹ்ல் அல் அன்ஸாரீ என்பதாகும். நபிகளாருடன் அனைத்து யுத்தங்களிலும் கலந்து கொண்டார், நபிகளாரை அதிகம் நேசிப்பவராக இருந்ததால் நபிகளார் அவருடைய வீட்டிற்கு சென்று அவரை சந்திப்பார்கள். நபிகளார் மரணித்த போது அவர்களின் தூய மேனியை அடக்கம் செய்ய கப்ரை தோண்டிய பெருமை இவரையே சாரும். அன்னார் ஹிஜ்ரி 32 அல்லது 34ல் தனது 70ம் வயதில் மரணமடைந்தார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- நாய், உருவப்படம் என்பன வானவர்களை விரட்டிவிடும் அம்சங்களாகும்.

2- நாய், உருவப்படம் என்பன இறை அருளை தடுத்துவிடும் அம்சங்களாகும்.

3- இயன்றளவு நாயை விட்டும் தூரமாக இருக்க வேண்டும், நாயுடன் ஒட்டி உறவாடுவதனால் பாரதூரமான நோய்கள் ஏற்படலாம்.

4- இச்சையைத் தூண்டும் ஆபாசமான படங்களை கையடக்கத் தொலைபேசி போன்றவற்றில் சேகரித்து வைப்பது எவ்விதத்திலும் ஆகுமாகமாட்டாது. அது இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களுக்கே முரணானதாகும்.

(٣٦) عَنْ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُوْلَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "لَا يَدْخُلُ الْجَنَّةَ قَاطِعُ رَحِمٍ" (صحيح مسلم ٢٥٥٦)

(36) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **"**உறவுக்காரரைத் துண்டித்து நடப்பவன் சுவனம் நுழையமாட்டான்**"**

அறிவிப்பவர் **:** ஜு பைர் பின் முத்இம் (ரலி)**.**

ஆதாரம் **:** முஸ்லிம் 2556**.**

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

ஜு பைர் பின் முத்இம் பின் அதி பின் நவ்பல் (ரலி) ஆகிய இவர் குரைஷி வம்சத்தின் மிகப் பெரும் புள்ளிகளில் ஒருவராவார்**.** அவரின் தந்தைதான் நபிகளார் தாயிபிலிருந்து விரட்டியக்கப்பட்டு வந்த போது அடைக்கலம் வழங்கினார்**.** ஜு பைர் (ரலி) அவர்கள் பத்ஹு மக்காவிற்கு முன்னர் இஸ்லாத்தை ஏற்றார்கள்**.** நபிகளாரைத் தொட்டும் 60 ஹதீஸ்களை அறிவித்த இவர் ஹிஜ்ரி 57ல் மதீனாவில் மரணமடைந்தார்**.**

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- உறவுகளைத் துண்டித்து நடப்பது கண்டிக்கப்பட்டதாகும்.

2- உறவுகளை சேர்ந்து நடப்பது அதிகமான நலவுகளையும் இரண அபிவிருத்தியையும் பெறுவதற்கான காரணமாகும்.

3- உறவுகளைத் துண்டித்து நடப்பவனுக்கான தண்டனை மிக விரைவில் சம்பவிக்க முடியும்.

(٣٧) عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مَنْ صَلَّى عَلَيَّ صَلَاةً وَاحِدَةً صَلَّى اللّٰهُ عَلَيْهِ عَشْرَ صَلَوَاتٍ وَحُطَّتْ عَنْهُ عَشْرُ خَطِيْئَاتٍ وَرُفِعَتْ لَهُ عَشْرُ دَرَجَاتٍ". (سنن النسائي ١٢٩٧) هذا حديث صحيح.

**(37) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “யார் என்மீது ஒரு ஸலவாத் சொல்வாரோ அவருக்கு அல்லாஹ் 10 ஸலவாத் சொல்கின்றான், மேலும் அவருடைய 10 பாவங்கள் மன்னிக்கப்பட்டு, 10 அந்தஸ்துக்கள் உயர்த்தப்படும்”**

அறிவிப்பவர் **:** அனஸ் பின் மாலிக் **(**ரலி**)**

ஆதாரம் **:** நஸாஈ 1297 **(**இந்நபிமொழி ஆதாரபூர்வமானதாகும்**)**

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- நபி (ஸல்)அவர்களின் மீது ஸலவாத் சொல்வதன் சிறப்பும் மகிமையும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2- நபி (ஸல்)அவர்களின் மீது ஸலவாத் சொல்வது இறை அருளையும் மன்னிப்பையும் பெறுவதற்கான, இறைவனிடம் அந்தஸ்த்துக்கள் உயர்த்தப்படுவதற்கான முக்கிய காரணமாகும்.

3- நபிகளாரை நேசித்து, அவர் வழி நடந்து அவரை கண்ணியப்படுத்த வேண்டும்.

(٣٨) عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَعَنَ اللَّهُ الْوَاصِلَةَ وَالْمُسْتَوْصِلَةَ وَالْوَاشِمَةَ وَالْمُسْتَوْشِمَةَ (صحيح البخاري ٥٩٣٧)

(38) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “ஒட்டுமுடி வைத்துவிடுபவளையும் ஒட்டுமுடி வைத்துக் கொள்பவளையும் பச்சை குத்திவிடுபவளையும் பச்சை குத்திக்கொள்பவளையும் அல்லாஹ் சபிக்கிறான். (தன் கருணையிலிருந்து அப்புறப்படுத்துகிறான்.)”

அறிப்பவர் : இப்னு உமர்(ரலி).

ஆதாரம் : புஹாரி 5937.

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- ஒருவர் மற்றவருக்கு ஒட்டுமுடி வைத்துவிடுவதனை இந் நபிமொழி வண்மையாகக் கண்டிக்கின்றது. ஒட்டுமுடி வைத்துவிடுபவள், ஒட்டுமுடி வைத்துக் கொள்பவள் ஆகிய இருவரும் ஹராத்தை செய்கின்றனர்.

2- வைத்திய நோக்கங்களின்றி அழகு படுத்தும் நோக்கங்களுக்காக இறைவனின் படைப்பொழுங்கில் மாற்றம் செய்வதனை அவசியம் தவிர்க்க வேண்டும்.

(٣٩) عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ : لَعَنَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الْمُتَشَبِّهِينَ مِنْ الرِّجَالِ بِالنِّسَاءِ وَالْمُتَشَبِّهَاتِ مِنْ النِّسَاءِ بِالرِّجَالِ.
(صحيح البخاري ٥٨٨٥)

**(39) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஆண்களில் பெண்களைப் போன்று ஒப்பனை செய்துகொள்பவர்களையும், பெண்களில் ஆண்களைப் போல் ஒப்பனை செய்து கொள்பவர்களையும் சபித்தார்கள்.**

அறிப்பவர் **:** இப்னு அப்பாஸ் (ரலி).

ஆதாரம் **:** புஹாரி 5885.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1-ஆடை, குணாதிசயங்கள் மற்றும் அங்கசைவுகளில் ஆண்கள் பெண்களுக்கும் பெண்கள் ஆண்களுக்கும் ஒப்பாகுவதனை இஸ்லாம் தடைசெய்திருக்கின்றது.

2-இப்படி செய்வதன் மூலம் இறைவன் ஏற்படுத்திய இயல்பு நிலையிலிருந்து மனிதன் வெளிப்படுகின்றான்.

3-ஆண் பெண்ணுடனும் பெண் ஆணுடனும் கலப்பதென்பது இயல்பொழுங்கை மாற்றுவதும் இரு பாலினத்தையும் சீர்குலைப்பதும் இஸ்லாமிய போதனைகளிலிருந்து வெளியேறும் ஒரு நிலையாகும்.

(٤٠) عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "يُسْتَجَابُ لِأَحَدِكُمْ مَا لَمْ يَعْجَلْ يَقُولُ دَعَوْتُ فَلَمْ يُسْتَجَبْ لِي" (صحيح البخاري ٦٣٤٠)

**(40) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "நான் பிரார்த்தித்தேன். ஆனால், என் பிரார்த்தனை ஏற்கப்படவில்லை" என்று கூறி நீங்கள் அவசரப்படாத வரையில் உங்கள் பிரார்த்தனை ஏற்கப்படும்.**

அறிவிப்பவர் : அபூ ஹு ரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 6340.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- மார்க்கம் அங்கீகரித்தவற்றை பெறுவதற்காக தொடர்ந்தும் பிரார்த்தனையில் ஈடுபடுவதன் முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது.

2- பிரார்த்திப்பவனின் பிரார்த்தனையை இறைவன் நிச்சயம் ஏற்பான் அல்லது அவன் கேட்பதனை விட சிறந்ததை வழங்குவான் அல்லது அவனுக்கு ஏற்படவிருந்த ஒரு துன்பத்தை அகற்றுவான் அல்லது அவன் பிரார்த்தனைக்கான பலனை மறுமையில் வழங்குவான் என்ற நம்பிக்கை பிரார்த்திக்கும் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். இறைவனின் அருளில் நிராசை அடைந்து விடக்கூடாது.

3- பிரார்த்தனை புரிந்துவிட்டு அவசரப்படுவது பிரார்த்தனையையே புறக்கனிப்பது போன்றதாகும்.

(٤١) عَنْ أَبِي مُوسَى رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ : قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مَثَلُ الَّذِي يَذْكُرُ رَبَّهُ وَالَّذِي لَا يَذْكُرُ رَبَّهُ مَثَلُ الْحَيِّ وَالْمَيِّتِ" (صحيح البخاري ٦٤٠٧)

(41) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **“**தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றுகிறவரின் நிலை உயிருள்ளவரின் நிலைக்கும், தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றாதவரின் நிலை உயிரற்றவரின் நிலைக்கு ஒத்திருக்கிறது. **”**

அறிவிப்பவர் : அபூ மூஸா(ரலி).

ஆதாரம் : புஹாரி 6407.

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- அதிகம் இறைவனை தியானம் செய்து நினைவு கூறவேண்டும்.

2- இறைவனை ஞாபகம் கூறுவதன் சிறப்பு இந் நபிமொழியில் சொல்லப்பட்டுள்ளது. அப்படி தியானம் செய்பவனின் உள்ரங்கமும் வெளிரங்கமும் உயிரோட்டமுள்ளதாகும். இறைவனை ஞாபகம் கூற தவறுகின்றவனிடமிருந்து நல்ல பயன்களை எதிர்பார்க்க முடியாது எனவே அவன் உயிரற்ற பிணத்திற்கு சமமாகின்றான்.

3- இறைவனை ஞாபகம் கூறுவது நாவு, சிந்தனை மற்றும் நன்னடத்தை ஆகிய மூன்றிலும் தென்படவேண்டும்.

(٤٢) عَنْ جَابِرٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : سَمِعْتُ رَسُولَ اللّٰهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ : "إِنَّ بَيْنَ الرَّجُلِ وَبَيْنَ الشِّرْكِ والكفر ، تَرْكَ الصَّلاَةِ" (صحيح مسلم ٨٢)

(42) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “நிச்சயமாக மனிதனுக்கும் இணைவைப்பு மற்றும் இறைமறுப்பு ஆகியவற்றுக்குமிடையே (பாலமாக இருப்பது) தொழுகையை கைவிடுவதுதான்”.

அறிவிப்பவர் : ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 82.

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- எந்த நிலையிலும் சக்திக்கு முடிந்தளவு பர்ளான தொழுகையை பேணிப்பாதுகாத்து தொழவேண்டும்.

2- ஒரு முஸ்லிம் தொழுகை விடயத்தில் பொடு போக்காக இருந்து விடலாகாது. ஏனெனில் அவன் பகுத்தறிவு அவன் உடலில் இருக்கும் வரை அவன் இஸ்லாமிய கட்டளைகளுக்கு உட்பட்டவனாகவே கருதப்படுகின்றான்.

3- இஸ்லாமிய கண்ணோட்டத்தில் தொழுகைக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்த்து, உண்மையில் அது தான் ஒரு மனிதனை முஸ்லிமாக அடையாளப்படுத்துகின்றது. அதனை விடுவது இறை நிராகரிப்பாகக் கருதப்படுவதற்கான சான்றாகும்.

(٤٣) عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اَللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "تَسَحَّرُوا فَإِنَّ فِي اَلسَّحُورِ بَرَكَةً" (صحيح البخاري ١٩٢٣)

(43) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **“**நீங்கள் ஸஹர் செய்யுங்கள் நிச்சயமாக ஸஹர் செய்வதில் பரக்கத் இருக்கிறது**”**

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : புஹாரி 1923.

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- நோன்பு நோற்பவர் பஜ்ருக்கு முன்னர் உணவு உற்கொள்வதன் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டுள்ளது.

2- அதில் இரண அபிவிருத்தியிருக்கின்றது.

3- அந்த உணவின் மூலம் நோன்பாளியின் உடல் வலுப்பெறுகின்றது.

4- அளவுக்கு மீறி அதிக உணவு, பாணங்களை உட்கொள்வது விரும்பத்தகாத ஒரு விடயமாகும்.

(٤٤) عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "إِذَا كَانُوا ثَلَاثَةٌ فَلَا يَتَنَاجَى اثْنَانِ دُونَ الثَّالِثِ" (صحيح البخاري ٦٢٨٨)

(44) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **"**நீங்கள் மூவர் இருக்கும்போது மூன்றாமவரைவிட்டுவிட்டு இருவர் மட்டும் இரகசியம் பேசவேண்டாம்**".**

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி).

ஆதாரம் : புஹாரி 6288.

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமை சங்கைப்படுத்துவதும் அவனை இழிவு படுத்தாமலிருப்பதும் இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களில் முக்கிய இடம் வகிக்கின்றது.

2- பயணமோ, பயணமல்லா நிலையிலோ மூவரிருக்க மூன்றாமவரை விட்டுவிட்டு இருவர் கதைப்பது அங்கீகரிக்கப்படமாட்டாது. அதனால் அவர் சங்கடப்பட்டு கவலைப்படலாம். ஒரு முஸ்லிமை நோவினை செய்வது ஹராமாகும்.

3- இஸ்லாமிய மார்க்கம் எப்போதும் நேசம், நீதி, சமத்துவத்துவம் என்பன சமூகத்தில் நிலவவேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. எனவே சமூகத்தில் உள்ள எந்த தனிநபரும் பாதிக்கப்படலாகாது என்பதில் அதிக கவனம் செலுத்துகின்றது.

(٤٥) عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اَللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مِنْ حُسْنِ إِسْلَامِ اَلْمَرْءِ، تَرْكُهُ مَا لَا يَعْنِيهِ" (جامع الترمذي ٢٣١٧) هذا حديث صحيح.

(45) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “தனக்கு தேவையில்லாதவற்றை (தனக்கு சம்பந்தமில்லாதவற்றை) விட்டு விடுவதே முஸ்லிமுடைய சிறந்த பண்பாகும்”

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி).

ஆதாரம் : திர்மிதி 2317. (இந்நபிமொழி ஆதாரபூர்வமானதாகும்)

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1-மற்றவர்களின் விடயத்தில் தலையிடாமல் இருப்பதனை இந்த நபிமொழி வலியுறுத்துகின்றது.

2-ஒரு முஸ்லிம் மற்றவர்களின் இரகசியங்களை துருவி ஆராயாமல் இருப்பது அவசியமாகும்.

3-மற்றவர்களின் விடயங்களில் தலையிடுவதனால் குடும்ப மற்ற சமூக அங்கத்தவர்களுக்கிடையில் பிரச்சனைகள் ஏற்படலாம். எனவே அதனை விட்டு ஒதுங்குவது அவசியமாகும்.

4-இதனால் நன்மையை ஏவி தீமையைத் தடுக்கக் கூடாது என்ற அர்த்தம் கொள்ளக்கூடாது. ஏனெனில் அது எல்லா காலங்களிலும் எல்லா இடங்களிலும் கட்டாயமான ஒரு காரியமாகும்.

(٤٦) عَنْ جَرِيرِ بْنِ عَبْدِ اللَّهِ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : "لَا يَرْحَمُ اللَّهُ مَنْ لَا يَرْحَمُ النَّاسَ" (صحيح البخاري ٧٣٧٦)

(46) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **“**மனிதர்களின் மீது கருணைகாட்டாதவனுக்கு அல்லாஹ் கருணைகாட்டமாட்டான்**”.**

அறிவிப்பவர் : ஜரீர் இப்னு அப்தில்லாஹ் (ரலி).

ஆதாரம் : புஹாரி 7376.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

ஜரீர் இப்னு அப்தில்லாஹ் அல்பஜலி (ரலி) இவர் யமன் தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கோத்திரத் தலைவராகக் கருதப்பட்ட இவர் ஹிஜ்ரி 10ம் ஆண்டிற்கு சற்று முன்னர் இஸ்லாத்தை ஏற்றார். அவரின் அழகான தோற்றத்திற்காக இந்த உம்மத்தின் யூஸுப் என்ற அழைக்கப்பட்டார். கிட்டத்தட்ட 100 ஹதீஸ்களை நபிகளாரைத் தொட்டு அறிவித்த இவர் ஹஜ்ரி 54 அல்லது 51ல் மரணமடைந்தார்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- இஸ்லாம் காருண்யம், நேசம் என்பவற்றை போதிக்கும் ஒரு வேதமாகும்.

2- ஒரு மனிதன் தன் வீடு, குடும்பம், சமூகம் ஆகியவற்றுடன் இரக்க வாஞ்சையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

3- வன்மையைக் கைக்கொள்வது எப்போதும் நற்குணத்தினை பிரதிபலிக்காது.

(٤٧) عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا قَالَتْ : قُلْتُ : يَا رَسُولَ اللَّهِ إِنَّ لِي جَارَيْنِ فَإِلَى أَيِّهِمَا أُهْدِيْ ؟ قَالَ : "إِلَى أَقْرَبِهِمَا مِنْكِ بَابًا" (صحيح البخاري ٢٥٩٥)

(47) ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள் : எனக்கு இரு அண்டைவீட்டார் உள்ளனர், அவ்விருவரில் யாருக்கு நான் அன்பளிப்புக் கொடுக்க வேண்டுமென நான் நபியவர்களிடம் வினவினேன். “இருவரில் யாருடைய வீட்டு வாசல் உங்களுக்கு நெருக்கமாக இருக்கிறதோ அவருக்கு (க் கொடுங்கள்)” எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி).

ஆதாரம் : புஹாரி 2595.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- எல்லா அண்டை வீட்டாரையும் கவனிக்க முடியாத பட்சத்தில் மிக நெருங்கியவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

2- அண்டை வீட்டார்களில் முதலில் நெருங்கிய பந்தங்களுக்கே நன்கொடைகள் வழங்க வேண்டும். அவர்கள் அனைவரும் ஒரே தரத்தில் இருப்பின் வீட்டுவாயிலுக்கு மிக அண்மையில் உள்ளவருக்கே முன்னுரிமை வழங்க வேண்டும்.

3- நன்கொடைகள் உண்மையான நேசத்திற்கு வழிவகுக்கும்.

(٤٨) عَنْ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ :
"خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ" (صحيح البخاري ٥٠٢٧)

(48) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “அல்குர்ஆனை (த் தானும்) கற்று அதை(ப் பிறருக்கும்) கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்.

அறிவிப்பவர் : உஸ்மான் (ரலி).

ஆதாரம் : புஹாரி 5027.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

உஸ்மான் பின் அப்பான் (ரலி) அவர்கள் ஆரம்பகாலத்தில் இஸ்லாத்தை ஏற்ற ஒரு முக்கியமான நபித்தோழர். இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் மூன்றாம் கலீபாவான இவர் நபிகளாரின் இரு மகள் மார்களை மணந்தமைக்காக தின்னூரைன் என்று அழைக்கப்படுகின்றார், இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக தனது உயிர், செல்வம் என்பவற்றை அள்ளி வழங்கினார். உமர் (ரலி) அவர்களின் பின்னர் கிலாபத் பொறுப்பை ஏற்ற இவர்கள் மதீனாவில் ஹிஜ்ரி 35ம் ஆண்டு கிளர்ச்சியாளர்களால் கொலை செய்யப்பட்டு வீரமரணமடைந்தார்கள்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1-அல்குர்ஆனை அதன் சரியான உச்சரிப்புடன் கற்று, அதனை பிறருக்கு கற்றுக் கொடுத்து, அதன் சட்டதிட்டங்களை விளங்குவதன் அவசியம் இந்த நபி மொழியில் உணர்த்தப்பட்டுள்ளது.

2-நல்லறங்களில் சிறந்தது இறை திருப்தியை மாத்திரம் கருத்திற் கொண்டு அல்குர்ஆனை கற்று அதனை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுப்பதாகும்.

3-அல்குர்ஆனை கற்று அதனை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுப்பது நிறைந்த நலவுகளையும் இரண விருத்தியையும் ஈட்டித்தரக்கூடிய காரணங்களில் உள்ளவையாகும்.

(٤٩) عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اَللَّهُ عَنْهُمَا عَنِ اَلنَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: " كُلُّ مُسْكِرٍ خَمْرٌ، وَكُلُّ مُسْكِرٍ حَرَامٌ" (صحيح مسلم ٢٠٠٣)

(49) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **“**போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் மதுவாகும் போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் தடை செய்யப்பட்டதாகும்**”**

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி). ஆதாரம் : முஸ்லிம் 2003.

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- போதை வஸ்த்துக்களை உட்கொள்வதனை முழுமையாக தவிர்க்க வேண்டும் ஏனெனில் அவை உடல் ஆரோக்கியம், செல்வம், குடும்பம் மற்றும் சமூகம் என்பவற்றை சீர்குலைத்துவிடும்.

2- மது மற்றும் அது போன்ற மனித பகுத்தறிவை பேதலிக்கச் செய்யும் அனைத்து போதை வஸ்த்துக்களும் தடைசெய்யப்பட்டுள்ளன.

3- ஒரு மனிதன் தன் பகுத்தறிவு, சிந்தனை, உடல், செல்வம், அவன் வாழும் சூழல் என்பவற்றினை பேணிப் பாதுகாப்பது அவசியமாகும். அவற்றை மாசுபடுத்தும் எந்த காரியத்தையும் மேற்கொள்ளக்கூடாது.

(٥٠) عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ "أَنَا أَوَّلُ النَّاسِ يَشْفَعُ فِيْ الْجَنَّةِ ، وَأَنَا أَكْثَرُ الْأَنْبِيَاءِ تَبَعاً"

(صحيح مسلم ١٩٦)

**(50)** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **"**நானே சுவனத்திற்காகப் பரிந்துரைக்கும் முதல் மனிதராவேன், இறைத்தூதர்களிலேயே அதிகமான மக்களால் பின்பற்றப்படுபவனும் நானே.**"**

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 196.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

1- நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்படும் உயரிய அந்தஸ்த்தும் கண்ணியமும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இறைவனின் உத்தரவின் பிரகாரம் அவர்களே சுவனத்திற்காக முதல் பரிந்துரை செய்பவராக இருப்பார்கள்.

2-இறைத்தூதர்களில் நபி முஹம்மத் (ஸல்) அவர்களே அதிகமானவர்களால் பின்பற்றப்படுவார்கள். அவர்களைத் துயர்ந்தோரே மற்ற சமூகத்தினரை விட எண்ணிக்கையில் அதிகமானவர்கள்.

3-நபியவர்களின் இந்த பரிந்துரை அல்லாஹ்வையும் அவன் தூதரையும் விசுவாசித்து இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப நல்லறம் புரிந்தோருக்கே கிடைக்கவிருக்கின்றது.

# முதலாவது ஹதீஸ் மனனப் போட்டி

## ஹிஜ்ரி 1433ம் ஆண்டு

<table>
<tr><th>போட்டியின் படித்தரங்கள்</th><th>மனனமிட வேண்டியவைகள்</th><th>பொதுவான நிபந்தனைகள்</th></tr>
<tr><td>முதலாம் தரம் (வகுப்பு)</td><td>50 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 50ம் ஹதீஸ் வரை.</td><td rowspan="5">1-தமிழ்ப் பேசும் மக்களுக்கு போட்டியின் ஏதாவது ஒரு தரத்தில் கலந்து கொள்ளலாம்.<br>2- (தான்) கலந்து கொள்ளும் பகுதிக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ்களை மனனமிட வேண்டும்.<br>3- போட்டி நடைபெறும் போது இகாமா / கடவுச்சீட்டுடைய பிரதியொன்று ஒப்படைக்கப்படல் வேண்டும், அதுவே பரிசு வழங்குகையில் பிரதான தேர்வுவிதியாகும். (மாறாக பெயரில் மாற்றம் ஏற்படின் பரிசு வழங்கப்பட மாட்டாது.)<br>4- வெற்றி பெறும் பட்சத்தில் பரிசு வழங்கும் தினம், இடம் குறித்து அறிவிக்க தற்போது பாவணையிலுள்ள கையடக்கத் தொலைபேசி / தொலைபேசி இலக்கம் பதியப்படல் வேண்டும்.<br>5- எதிர்வரும் 14-6-1433ஹி – 5-5-2012ம் திகதி முதல் போட்டி நடைபெறும். (ஹதீஸ்களை) ஒப்புவிக்கும் நேரங்கள் பற்றி போட்டி நடைபெறும் இடங்களில் அறிவிக்கப்படும்.<br>6- ஒவ்வொரு தரத்திலும் முதல் 10 வெற்றியாளர்கள் கௌரவிக்கப்படுவர் (வெற்றியாளர்கள்) சமநிலை அடையும் பட்சத்தில் குழுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.<br>7- சிறுவர்களுக்கும் (அவர்களுக்கு) குறிப்பிட்ட பிரிவுகளுக்கமைய போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.<br>8-கலந்து கொள்ளும் அனைவருக்கும் அவர்களை ஊக்குவிக்கும் முகமாக பரிசில்கள் வழங்கப்படும்.<br>9- ஆண்கள் ரப்வா த∴வா நிலையத்திலும், அதன் பயிற்சிநெறி நடைபெறும் இடமான “மஸ்ஜிதுஸ்ஸ∴தைன்” பள்ளியிலும் (மனனமிட்ட ஹதீஸ்களை) ஒப்புவிக்கலாம். பெண்கள் ரப்வா த∴வா நிலையத்தின் பெண்கள் பிரிவிலும், ஹய்யுல் வஸாராத் பகுதியிலுள்ள “தாரு ஆதிகா” குர்ஆன் மத்ரஸாவிலும், மலஸ்ஸிலுள்ள “நூருல் குர்ஆன்” மத்ரஸாவிலும் ஒப்புவிக்கலாம்.<br>10- போட்டிக்குரிய ஹதீஸ்கள் அரபு மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்புடன் www.islamhouse.com எனும் இணையத்தில் குரலொலி வடிவில் கேட்டுப் பயன்பெறலாம்.<br>11-போட்டியில் வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் 1433 ரஜப் மாத இறுதியில் www.islamhouse.com என்ற இணையதளத்தில் அறிவிக்கப்படும்.<br>12-வெற்றியாளர்கள் விழா நடந்து 10 நாட்களுக்குள் பரிசுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் எக்காரணத்தைக் கொண்டும் பின்பு பரிசில்கள் வழங்கப்பட மாட்டாது.<br>13- மேலதிக விபரங்களுக்காக பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் : 01454900- மாற்றிலக்கம் (transfer no) 303. அல்லது : 0507092427.</td></tr>
<tr><td>இரண்டாம் தரம்</td><td>40 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 40ம் ஹதீஸ் வரை.</td></tr>
<tr><td>மூன்றாம் தரம்</td><td>25 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 25ம் ஹதீஸ் வரை.</td></tr>
<tr><td>நான்காம் தரம்</td><td>15 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 15ம் ஹதீஸ் வரை.</td></tr>
<tr><td>ஐந்தாம் தரம்</td><td>10 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 10ம் ஹதீஸ் வரை.</td></tr>
</table>

| போட்டியின் பரிசுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வெற்றியாளர் | முதலாம் தரம் 50 ஹதீஸ்கள் | இரண்டாம் தரம் 40 ஹதீஸ்கள் | மூன்றாம் தரம் 25 ஹதீஸ்கள் | நான்காம் தரம் 15 ஹதீஸ்கள் | ஐந்தாம் தரம் 10 ஹதீஸ்கள் |
| (1) | 1500 | 1300 | 1100 | 900 | 700 |
| (2) | 1400 | 1200 | 1000 | 800 | 600 |
| (3) | 1300 | 1100 | 900 | 700 | 500 |
| (4) | 1200 | 1000 | 800 | 600 | 400 |
| (5) | 1100 | 900 | 700 | 500 | 300 |
| (6) | 1000 | 800 | 600 | 400 | 200 |
| (7) | 900 | 700 | 500 | 250 | 100 |
| (8) | 800 | 600 | 400 | 200 | 50 |
| (9) | 700 | 500 | 300 | 150 | 50 |
| (10) | 600 | 400 | 200 | 100 | 50 |
| மொத்தம் | 10500 | 8500 | 6500 | 4600 | 2950 |

# முதலாவது ஹதீஸ் மனனப் போட்டி

## ஹிஜ்ரி 1433ம் ஆண்டு

<table>
<tr><th>போட்டியின் படித்தரங்கள்</th><th>மனனமிட வேண்டியவைகள்</th><th>பொதுவான நிபந்தனைகள்</th></tr>
<tr><td>முதலாம் தரம் (வகுப்பு)</td><td>50 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 50ம் ஹதீஸ் வரை.</td><td rowspan="5">1-தமிழ்ப் பேசும் மக்களுக்கு போட்டியின் ஏதாவது ஒரு தரத்தில் கலந்து கொள்ளலாம்.<br>2- (தான்) கலந்து கொள்ளும் பகுதிக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ்களை மனனமிட வேண்டும்.<br>3- போட்டி நடைபெறும் போது இகாமா / கடவுச்சீட்டுடைய பிரதியொன்று ஒப்படைக்கப்படல் வேண்டும், அதுவே பரிசு வழங்குகையில் பிரதான தேர்வுவிதியாகும். (மாறாக பெயரில் மாற்றம் ஏற்படின் பரிசு வழங்கப்பட மாட்டாது.)<br>4- வெற்றி பெறும் பட்சத்தில் பரிசு வழங்கும் தினம், இடம் குறித்து அறிவிக்க தற்போது பாவணையிலுள்ள கையடக்கத் தொலைபேசி / தொலைபேசி இலக்கம் பதியப்படல் வேண்டும்.<br>5- எதிர்வரும் 14-6-1433ஹி – 5-5-2012ம் திகதி முதல் போட்டி நடைபெறும். (ஹதீஸ்களை) ஒப்புவிக்கும் நேரங்கள் பற்றி போட்டி நடைபெறும் இடங்களில் அறிவிக்கப்படும்.<br>6- ஒவ்வொரு தரத்திலும் முதல் 10 வெற்றியாளர்கள் கௌரவிக்கப்படுவர் (வெற்றியாளர்கள்) சமநிலை அடையும் பட்சத்தில் குழுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.<br>7- சிறுவர்களுக்கும் (அவர்களுக்கு) குறிப்பிட்ட பிரிவுகளுக்கமைய போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.<br>8-கலந்து கொள்ளும் அனைவருக்கும் அவர்களை ஊக்குவிக்கும் முகமாக பரிசில்கள் வழங்கப்படும்.<br>9- ஆண்கள் ரப்வா தஃவா நிலையத்திலும், அதன் பயிற்சிநெறி நடைபெறும் இடமான “மஸ்ஜிதுஸ்ஸஃதைன்” பள்ளியிலும் (மனனமிட்ட ஹதீஸ்களை) ஒப்புவிக்கலாம். பெண்கள் ரப்வா தஃவா நிலையத்தின் பெண்கள் பிரிவிலும், ஹய்யுல் வஸாராத் பகுதியிலுள்ள “தாரு ஆதிகா” குர்ஆன் மத்ரஸாவிலும், மலஸ்ஸிலுள்ள “நூருல் குர்ஆன்” மத்ரஸாவிலும் ஒப்புவிக்கலாம்.<br>10- போட்டிக்குரிய ஹதீஸ்கள் அரபு மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்புடன் www.islamhouse.com எனும் இணையத்தில் குரலொலி வடிவில் கேட்டுப் பயன்பெறலாம்.<br>11-போட்டியில் வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் 1433 ரஜப் மாத இறுதியில் www.islamhouse.com என்ற இணையதளத்தில் அறிவிக்கப்படும்.<br>12-வெற்றியாளர்கள் விழா நடந்து 10 நாட்களுக்குள் பரிசுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் எக்காரணத்தைக் கொண்டும் பின்பு பரிசில்கள் வழங்கப்பட மாட்டாது.<br>13- மேலதிக விபரங்களுக்காக பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் : 01454900- மாற்றிலக்கம் (transfer no) 303. அல்லது : 0507092427.</td></tr>
<tr><td>இரண்டாம் தரம்</td><td>40 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 40ம் ஹதீஸ் வரை.</td></tr>
<tr><td>மூன்றாம் தரம்</td><td>25 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 25ம் ஹதீஸ் வரை.</td></tr>
<tr><td>நான்காம் தரம்</td><td>15 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 15ம் ஹதீஸ் வரை.</td></tr>
<tr><td>ஐந்தாம் தரம்</td><td>10 ஹதீஸ்கள்,<br>1 ஆவது ஹதீஸில் இருந்து 10ம் ஹதீஸ் வரை.</td></tr>
</table>

| போட்டியின் பரிசுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வெற்றியாளர் | முதலாம் தரம் 50 ஹதீஸ்கள் | இரண்டாம் தரம் 40 ஹதீஸ்கள் | மூன்றாம் தரம் 25 ஹதீஸ்கள் | நான்காம் தரம் 15 ஹதீஸ்கள் | ஐந்தாம் தரம் 10 ஹதீஸ்கள் |
| (1) | 1500 | 1300 | 1100 | 900 | 700 |
| (2) | 1400 | 1200 | 1000 | 800 | 600 |
| (3) | 1300 | 1100 | 900 | 700 | 500 |
| (4) | 1200 | 1000 | 800 | 600 | 400 |
| (5) | 1100 | 900 | 700 | 500 | 300 |
| (6) | 1000 | 800 | 600 | 400 | 200 |
| (7) | 900 | 700 | 500 | 250 | 100 |
| (8) | 800 | 600 | 400 | 200 | 50 |
| (9) | 700 | 500 | 300 | 150 | 50 |
| (10) | 600 | 400 | 200 | 100 | 50 |
| மொத்தம் | 10500 | 8500 | 6500 | 4600 | 2950 |